

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

**ப.பிரதாப்**



"காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை"

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 819379638-1
9788193796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1

9788193796382

# 46. சங்க இலக்கியங்களில் நீர்ச் சூழலியல்

**உ. மணிமேகலை**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி,
பொள்ளாச்சி.

குறிப்பிட்ட இடத்தில் உள்ள தாவர மற்றும் விலங்குகள் அனைத்தையும் உள்ளடக்கியது சூழல் என்பதாகும். சூழல் என்றால் 'சுற்றுப்புறம்' என்று கோனார் கையகராதி விளக்கம் தருகின்றது. சூழலை ஆங்கிலத்தில் Environment என்பர். இதன் பொருள் "The Surroundings In Which A Person, Animal or Plant Lives the Natural World" என Oxford English Mini Dictionary பொருள் தருகிறது. சங்கநூல்களில் நிலம், நீர் போன்ற ஐம்பூதங்கள் பற்றிய விழிப்புணர்வும் அறிவும் காணப்படுகின்றன.

## நீர் சூழலியல்

சூழலில் நீர் என்பது இன்றியமையாத ஒன்றாகும். திருவள்ளுவர் நீரின்றி அமையாது உலகு என்று கூறியுள்ளார். பழந்தமிழரிடையே நீர் மாசடைதல் தொடர்பான சிந்தனைகள் இருந்துள்ளமைக்கு சங்கப் பாடல்களே சான்றாக நிற்கின்றன.

குறுந்தொகைப் பாடல்களில் நீர் மாசடைதல் தொடர்பான செய்திகள் கூறப்படுகின்றன. அதாவது யானை தன் தலையிலும் உடலிலும் தானே புழுதியை வாரிக் கொட்டிக் கொள்ளும் இயல்புடையது. அவ்வாறு செய்யும் யானை பாகன் தெளிந்த நீரில் புழுதி முழுவதும் நீங்கும்படி பொழுது கழுவியதாகக் கூறுகிறது.

"மாசு அறக் கழீஇய யானை போல"

என்ற அடியில் தெளிந்து பொதுவான நீரில் நீராடுவதால் நீர் மாசடைதல் பற்றிய சிந்தனை காணப்படுகிறது.

மேலும் தலைவியைப் பரிந்து வாழக்கூடிய தலைவன் தலைவியை தன்னுடன் கூட்டி வராமை நன்று என்று

எண்ணுகிறான். அதற்குக் காரணம் வேட்டை நாய்கள் தமக்கேற்ற இறையை தேடிப்பிடித்து உண்டபின் மிச்சங்களை நீரிலே போட்டு விடுவதனால் அங்குள்ள நீர் நிலைகளில் நாற்றம் வீசுக்கின்றன. எனவே, இத்தகைய சூழலில் தலைவியை கூட்டி வராமை நன்று என்று எண்ணுவதாக,

"வேட்டச் செந்நாய் கிளைத்தூண் பிச்சில்
குளவி மொய்த்த அழுகற் சில்நீர்"

என்ற பாடலடிகள் தெளிவுபடுத்துகின்றன.

## நீர்நிலை அமைத்தல்

மழை நீரைச் சேமித்து வைப்பதற்கு ஏற்ற நீர் நிலைகளை அமைப்பது ஒரு மன்னனின் தலையாய கடமை என்பதைப் புறநானூற்றுப் பாடலில்,

"நிலன் நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோரம்ம இவன் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளாதோரே"

என்று புலவர் பாண்டியன் நெடுஞ்செழியனைப் பார்த்துப் பாடியுள்ளார்.

மேலும், நீர் நிலை அமையும் விதத்தை,

"அறையும் பொறையும் மணந்த தலைய
எண்நாள் திங்கள் அணைய கொடுங் கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளம் கீழ்வதுமாதோ" (புறம்.118)

என்ற பாடல் அடிகள் ஏறி எட்டாம் பறை வடிவில் இருக்க வேண்டுமென்பதை அறியமுடிகிறது.

குளித்தல், குடித்தல், துணி துவைத்தல் போன்ற அடிப்படைத் தேவைகளுக்காக நீர்த்தேக்கங்களை அமைத்து நிலத்தைத் தோண்டி நீர் பெற்றுமன மேலாண்மை நடவடிக்கைகளைச் சங்க மக்கள் மேற்கொண்டமையை

"களர்ப்படு கூவல் தோண்டி நாளும்
புலைத்தி கழீஇய தூவெள் அறுவை" (புறம்.311)

என்ற வரிகளால் அறிந்து கொள்ள முடிகின்றது.

### நீரியல் சுழற்சி

நீர்மக் கோளம், வளிக் கோளம், புறணி ஆகிய மூன்று ஊடகங்களில் நீர் சுழன்று வருகிறது. பரந்து விரிந்த கடல் பரப்பிலிருந்து நீர் வளிக்கோளத்திற்கும் புறகணிக்கும் சென்று அங்கிருந்து கடல்களை அடைவது ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடைய செயல்களான மாரி பொழிதல், ஓடுநீர், நில நீர் பாய்வு, நீராவியாதல், இலை நீர் ஆவியாதல் போன்ற சிக்கலான நிகழ்ச்சிகள் நீர் மறுச்சுழற்சி எனப்படும் என்று கே.ஆர். வேங்கடசாமி நீரின் சுழற்சி பற்றி விளக்குகிறார்.

கடலில் இருந்து நீரை முகந்ததால் மழைபொழியக் கூடிய மேகங்கள் தோன்றின என்பதை

"முழங்கு கடல் முகந்த கமஞ்சுல் மா மழை" (நற்றிணை 347)

என்ற பாடலின் மூலம் அறியமுடிகிறது.

### நீராடல்

உடலின் வெப்பத்தைத் தணித்துக் கொள்ளவும் உடலைத் தூய்மை செய்யவும் நீராடல் அவசியமாகின்றது. மனிதன் தூய்மையாகக் காணப்பட வேண்டுமெனில் அதற்கு நீர் அவசியம் என்பதை வள்ளுவர் "புறந்தூய்மை நீரான் அமையும்" என்று கூறுகிறார்.

ஆறு, அருவி போன்ற நீர்நிலைகளில் நீராடும்போது உடல் சுத்தமாவதுடன் அவற்றில் கலந்து வரும் மூலிகைகளால் பலவிதமான நோய்களும் குணமாகின்றன.

"கனல் பெயல் பொழிந்தென கானக் கல்யாற்று
முனிஇலை கழிந்தனகிழ் இனரொடு வரும்
விருந்தின் தீம்நீர் மருந்தும் ஆகும்" (நற்றிணை 53)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

சங்க காலத்தில் உள்ள 'நீர் சூழல்' பற்றி சங்கப் பாடல்களில் வாழ்வியல் கூற்றாகவும், கருத்தாடல்களிலும், உளவியலும், அழகியல் உணர்வுகளிலும் கூறப்படுகின்றன. மேலும் நீர் சூழலியலில் நீர் மாசுபாடு அதற்கான தீர்வுகளையும் சங்க இலக்கியம் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.